# அறந்தாங்கி நகராட்சி

# நகர்மன்ற கூட்ட நிகழ்ச்சி நிரல்

## விளம்பி வருடம் ஐப்பசி மாதம் 13—ஆம் நாள் அக்டோபர் மாதம் 30.10.2018ம் நாள் செவ்வாய் கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற உள்ள சாதாரண கூட்டப் பொருள் விபரம்

**பொருள் எண். 1**

நகராட்சி பொறியாளர் (ம) ஆணையர்(பொ) அவர்களின் செப்டம்பர்—2018ம் மாதத்திற்கான நாட்குறிப்பு பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:—**

பதிவு செய்யலாம்

**பொருள் எண்—2**

1. Resolved that Aranthangi Municipality in authorizing the authorized signatory to borrow the interest free loan of Rs.210.00 Lakh (Rupees Two Hundred and ten Lakh only) from TUFIDCO for ‘Provision of Internal Plumbing for HSC (Minimum 5877 Nos.) for making optimum utilization of Water Supply at Aranthangi Municipality’ under Revolving Fund of UIDSSMT as per the terms and Conditions prescribed by TUFIDCO.
2. The authorized signatory be and hereby authorized to execute the loan Agreement and other documents if any with TUFIDCO and complete all the other formalities including affixing of the common seal of Aranthangi Municipality on the documents to be executed with TUFIDCO on behalf of Aranthangi Municipality
3. Resolved to repay the interest free loan as per the repayments schedule in the agreement.
4. Resolved to adhere to time line as envisaged DPR.
5. Resolved that Aranthangi Municipality is authorizing the authorized signatory to make necessary budgetary provisions in Aranthangi Municipality’s annual budget for the repayment of principal for the project proposals to TUFIDCO and is hereby confirmed that all dues will be paid in time without default for creating sustainable revolving fund.
6. Resolved that Aranthangi Municipality is authorizing the authorized signatory to open and operate as ESCROW account for Water Supply in favour of TUFIDCO till the repayment of loan.
7. Resolved that the Excess Amount to be arrived for this Project shell be Meet out from General Fund

**Office Note:** TUFIDCO Conditions will be Accepted

**பொருள் எண்–3**

அரசு ஆணை எண்.73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA IV) துறை நாள்.19.07.2018 மற்றும் அரசு ஆணை எண்.76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA IV) துறை நாள்.26.07.2018ன்படி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 அட்டவணை 4ல் உள்ள விதிகளில் கூறப்பட்டுள்ள அதிகாரங்களின்கீழ், அறந்தாங்கி நகராட்சி சொத்துவரியினை 01.04.2018 முதல் பொது சீராய்வு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. மேற்கண்ட அரசாணைகளின்படியும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ந.க.எண்.20555/2018/ஆர்1 எண்ணிட்ட 21.08.2018ஆம் தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு 16.08.2018ஆம் தேதிய கூட்ட நடவடிக்கைகளின்படியும், அதன் நெறிமுறைகளை பின்பற்றி அறந்தாங்கி நகராட்சியில் **01.04.2018** முதல் சொத்துவரி பொது சீராய்வு மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு இவ்வறிக்கையினை தினதந்தி நாளிதழில் 13.09.2018ம் தேதியன்று பிரசுரம் செய்யப்பட்டது. மேலும் இதுகுறித்து ஆட்சேபனைகள் ஏதும் இருப்பின் இவ்வறிப்பு வெளியிடப்பட்ட 30 தினங்களுக்குள் எழுத்து பூர்வமாக நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ ஆணையர் அறந்தாங்கி நகராட்சி என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. ஆனால் அறிவிப்பு பிரசுரம் செய்யப்பட்டு 30 தினங்கள் கடந்த நிலையில் ஆட்சேபனைகள் ஏதும் வரப்பெறவில்லை. எனவே 10.09.2018ம் தேதிய நகர்மன்ற தீர்மான எண்.121ன் படி நிர்ணயிக்கப்பட்ட மண்டலங்களின் அடிப்படை மதிப்பை(Zone Value) உறுதி செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| **மண்டலம்** | **01.04.2008-ல் சதுர அடிக்கு நிர்ணயம் செய்யப்பட்ட தொகை (மண்டல மதிப்பு)** | **01.04.2018-ல் நிர்ணயம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள தொகை (மண்டல மதிப்பு)** |
|---|---|---|
| A | 0.90 | **1.35** |
| B | 0.60 | **0.90** |
| C | 0.50 | **0.75** |

**மாற்றியமைக்கப்பட்ட மண்டலங்களின்படி தெருக்களின் விபரம்**

| வார்டு எண் | தெருவின் பெயர் | தற்போது உள்ள மண்டல விபரம் | 01.4.2018-ல் திருத்தி அமைக்கப்பட்ட மண்டல விபரம் |
|---|---|---|---|
| 1 | ரெங்கோஜிபாவா தெரு | A | A |
| | கங்காதரபுரம் (அண்ணா நகர் 1 முதல் 5ம் தெரு | B | B |
| 2 | கங்காதரபுரம் (எழில் நகர் 1 முதல் 7 வரை) | A | A |
| 3 | கங்காதரபுரம் (எழில்நகர் 8 முதல் 15 வரை) | A | A |
| 4 | கங்காதரபுரம் (பெரியார் தெரு) | A | A |
| | புதுத்தெரு | A | A |
| | பாரதியார் தெரு | B | B |
| 5 | என்.ஜி.ஜி.ஓ காலனி (பிள்ளையார் கோவில் சுற்றி உள்ள 4 தெருக்கள்) | A | A |
| | களப்பக்காடு | B | B |
| 6 | ரெங்கோஜிபாவா தெரு | A | A |
| | ஜீவா தெரு | A | A |
| | கள்ளிச்சந்து | B | B |
| 7 | நேரு தெரு | B | B |
| | பட்டுக்கோட்டைரோடு–1 என்.எஸ்.கே. நகர் (பகுதி மட்டும்) | B | B |
| | பட்டுக்கோட்டைரோடு–1 | A | A |
| 8 | பட்டுக்கோட்டைரோடு–1 (தெற்கு பகுதி) | A | A |
| | பட்டுக்கோட்டைரோடு–2 | A | A |
| | பட்டுக்கோட்டைரோடு–3 | A | A |
| | பட்டுக்கோட்டைரோடு–4 (வடக்கு பகுதி) | B | B |
| | அண்ணாத்தெரு | B | B |
| | ரயில்வே பீடர் ரோடு | B | B |

| | | | |
|---|---|---|---|
| 9 | பட்டுக்கோட்டைரோடு–4(தெற்கு பகுதி) | A | A |
| | சன்னதிவயல்–4கட்டுமாவடி சாலை வடக்கு பகுதி (கதவு எண்.169 to 226) | B | B |
| | வைரிவயல் (கதவு எண்.116 முதல் 135) | B | B |
| | வைரிவயல் (கதவு எண்.1 முதல் 115 இந்திராநகர்) | C | C |
| 10 | எல்.என்.புரம் –1 | B | B |
| | எல்.என்.புரம்–2 (வடக்கு பகுதி) | B | B |
| 11 | எல்.என்.புரம்–2 (தெற்கு பகுதி) | B | B |
| | எல்.என்.புரம்–2 (கதவு எண் 26 முதல் 208 முடிய காந்தி நகர்) | C | C |
| | எல்.என்.புரம்–3 | B | B |
| 12 | எல்.என்.புரம்–4 | B | B |
| | எல்.என்.புரம்–5 | B | B |
| | சன்னதி வயல் –4 | B | B |
| 13 | பழைய ஆஸ்பத்திரி ரோடு–2 | A | A |
| | பாரதிதாசன் தெரு | A | A |
| | சன்னதிவயல் –1 | A | A |
| | சன்னதிவயல் –2 | B | B |
| | சன்னதிவயல் –3 | B | B |
| 14 | எல்.என்.புரம்–4 (அவுலியாநகர்) | C | C |
| | சன்னதிவயல் –4 (எம்.ஜி.ஆர்.நகர்) | C | C |
| 15 | ஆவுடையார் கோவில் ரோடு (1 முதல் 40 வரை) | A | A |
| | ஆவுடையார் கோவில் ரோடு –1 (தெற்கு பகுதி) | B | B |
| | ஆவுடையார் கோவில் ரோடு–2 | B | B |
| | கோபால சமுத்திரம்–1 முதல் 3 வரை | C | C |
| | கோபால சமுத்திரம்–4 முத 5 வரை | B | B |
| 16 | மணிவிளான் –1 | B | B |
| | மணிவிளான் –2 மற்றும் 3ம் தெரு | A | A |
| | மணிவிளான் –4,5,6 | B | B |
| 17 | அப்துல் ஹமீது தெரு கதவு எண் 1 முதல் 49 முடிய | A | A |
| | அப்துல் ஹமீது தெரு கதவு எண் 50முதல் முழுவதும் | B | B |
| | அக்பர் தெரு | A | A |
| | ஜாகீர் உசேன் தெரு | A | A |
| | ஆவுடையார் கோவில் ரோடு–1 | A | A |
| | ஆவுடையார் கோவில் ரோடு–(நூலகம் பகுதி) | B | B |
| 18 | மணிவிளான் –7,8 | B | B |
| | மணிவிளான்–7 (விஸ்தரிப்பு) (கோட்டை கொள்ளைக்காடு) | B | B |
| 19 | பள்ளிவாசல் சந்து–1முதல் 5 தெருக்கள் | B | B |
| | பழைய ஆஸ்பத்திரி ரோடு–1 | A | A |
| | கடைத்தெரு –1 | A | A |
| | கடைத்தெரு –2 | B | B |
| | காமராஜர் தெரு | B | B |
| 20 | கோட்டை –1 | B | B |
| 21 | கோட்டை –1 | B | B |
| | கோட்டை –3 | B | B |
| 22 | கோட்டை –2 | B | B |
| | புதுக்கோட்டை ரோடு –2 | A | A |
| 23 | மாதா கோவில் தெரு | B | B |
| | தியாகி சின்னையா தெரு | B | B |
| | புதுக்கோட்டை ரோடு | A | A |

| | | | |
|---|---|---|---|
| | திருவள்ளுவர் தெரு | B | B |
| | ராஜகோபால் தெரு | B | B |
| | வடக்குவாடி | C | C |
| 24 | புதுக்கோட்டை ரோடு | A | A |
| | அங்காளம்மன் கோவில் தெரு | B | B |
| | முனுசாமி கோவில் சந்து | B | B |
| 25 | கோட்டை –4 | B | B |
| | கோட்டை –5 | B | B |
| | கோட்டை –6 | B | B |
| | கோட்டை –7 | B | B |
| | கோட்டை –8 | B | B |
| 26 | ராஜா தெரு | A | A |
| | வாடியான் தெரு | B | B |
| | காமாட்சியம்மன் கோவில் தெரு | B | B |
| | தியாகி சீனிவாசன் தெரு | A | A |
| 27 | அங்காளம்மன் கோவில் தெரு | B | B |
| | வளையல் காரத்தெரு | B | B |
| | வீரமாகாளியம்மன்கோவில் தெரு | A | A |

**அலுவலக குறிப்பு**

1. அனுமதி அளிக்கலாம்
2. 01.04.2018 முதல் பொது சொத்துவரி சீராய்வு சம்மந்தமான அறிக்கைகளை தினசரி நாளிதழில் மற்றும் மாவட்ட அரசிதழில் விளம்பரம் செய்யவும் அதற்குண்டான செலவித்திற்கும் மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது

**பொருள் எண்–4**

நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் ஆய்வுகூட்டம் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தஞ்சாவூர் அவர்களின் ஆய்வு கூட்ட அறிவுரைகளின் படி அறந்தாங்கி நகராட்சியில் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள குடிநீர் குழாய் இணைப்புகள் போக மீதமுள்ள குடிநீர் குழாய் இணைப்புகளுக்கு மதிப்பீடு தயார் செய்து கருத்துரு அனுப்ப கேட்டதின் அடிப்படையில் கீழ்கண்டவாறு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு அதன்படி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை –5 அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண்.13277/2018/WS1 நாள்,19.06.2018ல் ரூ.210.00 லட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்நிதியை தமிழ்நாடு நகர்ப்புற சேவை கட்டமைப்பு நிதி இணையம் (TUFIDCO) மூலம் வட்டி இல்லாத கடனாக பெற்று பணிகளை மேற்கொள்ளுமாறு நகராட்சி நிர்வாக ஆணையர், சேப்பாக்கம் சென்னை அவர்களின் மேற்படி உத்திரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி நிதியினை Tamil Nadu Urban Finance and Infrastructure Development Corporation Limited, Chennai-35 Letter No.TUFIDCO/ URF1819-33ULBs/AM(M)/2018 Dt.15.10.2018ம் கடிதத்தில் ரூ.173.99 இலட்சத்திற்கு வட்டி இல்லா கடனாக அனுமதித்து உத்தரவிடப்பட்டுள்ளது. எனவே கீழ்கண்டவாறு ரூ.210.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. கூடுதல் செலவினத் தொகை ரூ.36.01 இலட்சத்தை இந்நகராட்சியின் பொது நிதியில் ஈடு செய்யவும் மற்றும் தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகைக்கு தொழில் நுட்ப அனுமதி பெற மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| நகராட்சியின் மொத்த வரி விதிப்புகள் | - | 17346 |
| நகராட்சியின் மொத்த வீடுகள் | – | 12246 |
| வழங்கப்படவேண்டிய மொத்த இணைப்புகள் | – | 5877 |
| ஏற்கனவே உள்ள குடிநீர் குழாய் இணைப்புகள் | – | 6369 |
| தற்போது வழங்க வேண்டிய குடிநீர் இணைப்புகள் | – | 5877 |
| மதிப்பீட்டுத் தொகை | – | 210.00 இலட்சம் |

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேலும் வட்டி இல்லாத கடனாக வழங்கப்பட்ட தொகைக்கு கூடுதல் செலவினத் தொகையினை இந்நகராட்சியின் பொது நிதியில் ஈடு செய்ய மன்றம் அனுமதி வழங்கலாம்.
3. மேற்கண்ட பணி குடிநீர் பணி என்பதால் பணியின் அவசர அவசியம் கருதி மேற்கண்ட மதிப்பீட்டுத் தொகைக்கு தொழில் நுட்ப அனுமதி பெற மன்றம் அனுமதி வழங்கலாம். ந.க.எண்: 2815/2018/இ1

## பொருள் எண்–5

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கொள்கை அறிவிப்பில் அனைத்து நகராட்சி பகுதிகளிலும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் (R.O. Water ) CSR நிதி மூலம் அமைக்கப்படும் என தெரிவித்தார்கள். அதனடிப்படையில் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–5 மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களின் ஆய்வுக்கூட்டத்தில் மேற்கண்ட மாண்புமிகு அமைச்சர் அவர்களால் தெரிவிக்கப்பட்ட கொள்கை அறிவிப்பின்படி பணிகள் மேற்கொள்ள அறிவுரை வழங்கப்பட்டது.

அதனடிப்படையில் தற்பொழுது முதற்கட்டமாக இந்நகராட்சிக்குட்பட்ட ஒரு இடத்தில் (கோபாலசமுத்திரம் நீரேற்று நிலைய வளாகத்தில்) சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் அமைப்பு (ATM Water Machine with R.O. System ) அமைப்பதற்கும் அதனைத் தொடர்ந்து பத்து ஆண்டுகள் இயக்கி பராமரிப்பு செய்திட தகுதி வாய்ந்த நிறுவனங்களிடமிருந்து Expression of Interest (EOI) பெறுவதற்கு இந்நகர்மன்றத் தீர்மான எண்.130 நாள்.19.09.2018ன் மூலம் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி பணிக்கு 17.10.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றது. மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியில் கீழ்கண்ட விலை விபரங்கள் அளிக்கப்பட்டுள்ளது.

| Sl. No. | Item Description | Quantity | Units | BASIC RATE |
|---|---|---|---|---|
| 1 | 2 | 4 | 5 | 6 |
| 1 | Establishment of 1000 Ltr./Hr. capacity community drinking water system through Reverse Osmosis with UV treatment in Mayiladuthurai Municipality under PPP mode. Rate to be remitted to the Municipality (Rupees per 20 Ltr.) | 20.00 | Liters | 1.0000 |
| 1.1 | Rate to be charged for sale to public (Rupees per 20 Ltr.) | 20.00 | Liters | 6.9000 |
| 1.2 | Rate be charged for sale to public (Rupees per 1 Ltr from chilling machine) | 1.00 | Liter | 1.0000 |

பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியான M/S. Dharana Infrastructure Project Pvt. Ltd., Chennai நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. முன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/S. Dharana Infrastructure Project Pvt. Ltd., Chennai நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி உத்திவு வழங்கவும் அனுமதிக்கலாம்.
3. மேற்படி ஒப்பந்தப்புள்ளியில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு நகராட்சிக்கு ரூ.1.00 / 20 லிட்டர் பொதுமக்களுக்கு ரூ.6.90 / 20 லிட்டர் குளிர்ந்த நீர் ரூ.1.00 என்று உள்ளதனை ஏற்கலாம்.

பொருள் எண்–6

அறந்தாங்கி நகராட்சியில் 2018–2019ம் ஆண்டு தூய்மை இந்தியா இயக்கம் திடக்கழிவு மேலாண்மை திட்டம் 7வது மாநில உயர்மட்ட குழு நிதியின் கீழ் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை –5 அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.22866/P3/2018 நாள்.23.08.2018 ன்படி ரூ.11.20 இலட்சம் மதிப்பீட்டில் லைட் கமர்சியல் வாகனம் (LCV) வாங்கிட அனுமதித்து உத்திரவிடப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி வாகனம் சப்ளை செய்யும் பணி மேற்கொள்ள 12.09.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி கிரிஸ்டல் மோட்டார்ஸ், சேலம் நிறுவனம் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி உரிய இணைப்புகள் மற்றும் தொழிற்நுட்ப தகுதி பெறாத காரணத்தால் நிராகரிக்கப்பட்டது. பின்பு 28.09.2018அன்று இரண்டாம் முறை கோரியதில் ஒப்பந்தப்புள்ளி ஏதும் வரப்பெறவில்லை, 17.10.2018 அன்று மூன்றாம் முறை ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்திட மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரா் பெயர் | சதவிகிதம் |
|---|---|---|
| 1) | ஏ.பி.டி. இன்டஸ்ட்ரீஸ் லிமிடெட்,<br>கமர்சியல் வெகிக்கிள் டீலர்,<br>அஞ்சல் பெட்டி எண்.7, 51ஏ, பாலகாடு மெயின் ரோடு,<br>தெற்கு உக்கடம், கோயம்பத்தூர் –1 | மதிப்பீட்டு<br>விலை விகிதம் |
| 2) | கே.எஸ். ராகவன்,<br>306, சகாரஸ் அப்பார்ட்மென்ட், வடவள்ளி, கோயம்பத்தூர் | 7.14 % அதிகம் |

அலுவலகக் குறிப்பு:–

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. வரிசை எண்.2ல் கண்டுள்ள திரு.கே.எஸ்.ராகவன் என்பவரது ஒப்பந்தப்புள்ளி தொழிற்நுட்ப தகுதி பெறவில்லை. எனவே அதனை நிராகரிக்கலாம்.
3. மேற்படி பணிக்கு ஏ.பி.டி. இன்டஸ்ட்ரீஸ் லிமிடெட், கமர்சியல் வெகிக்கிள் டீலர், கோயம்பத்தூர் நிறுவனம் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விலை விகிதத்திற்கே குறைவாக உள்ளதனை ஏற்கலாம்.
4. மூன்றாம் அழைப்பாக உள்ளதாலும், மறு ஒப்பந்தப்புள்ளி கோருவதால் ஏற்படும் காலதமாதத்தை தவிர்க்கும் பொருட்டும் மேற்படி ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம். (ந.க.எண்.1955/2018/இ1)

பொருள் எண்–7

அறந்தாங்கி நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் நகராட்சி எல்லைக்குள் 27 வார்டுகளில் சேகரிக்கப்படும் மட்கும் குப்பையில் இருந்து N.G.O காலணி , மற்றும் L.N புரம் வாட்டர் டேங்க் மற்றும் புதுக்கோட்டை ரோட்டில் உள்ள கலவை உரக்கிடங்கில் இயற்கை மண்புழு உரம் தயாரிக்க வேண்டியுள்ளதால், மேற்படி மூன்று இடங்களில் மண்புழு உரம் தயாரிக்க வேண்டியுள்ளதால் அதற்கு தேவையான மண்புழு 200 கிலோ மற்றும் EM Solution 100 லிட்டர் வாங்கவும், அதற்காக உத்தேச செலவினம் ரூ.170000/- (ஒரு லட்சத்தி எழுபதாயிரம் மட்டும்)க்கு மன்ற பொருள் வைக்க அனுமதி வேண்டப்படுகிறது .

அலுவலகக்குறிப்பு :

1. பொது சுகாதாரப் பிரிவின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண் .6609/2018/எச்1)

## பொருள் எண்–8

இந்நகராட்சி நகர்மன்றத் தீர்மான எண். 210 நாள்.28.03.2018ன் படி 30 மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களை கொண்டு இந்நகராட்சி பகுதிகளில் டெங்கு உள்ளிட்ட காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகளை வீடுவீடா மேற்கொள்ளவும், அதற்கான செலவுத் தொகை ரூ.10.00லட்சத்திற்கு ஏப்ரல் 2018 முதல் செப்டம்பர் 2018வரை அனுமதி வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. தற்பொழுது நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் Roc No. 2571/2017/J1 நாள்.28.11.17 மற்றும் Roc No.13433/2018/ஜே1 நாள்.17.09.18ன்படி டெங்கு நோய் தடுப்பு பணிகளுக்கு 300 வீடுகளுக்கு 1 DBC பணியாளர் நியமித்து டெங்கு நோய் தடுப்பு நடவடிக்கை எடுக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி இந்நகராட்சியில் உள்ள 12246 வீடுகளுக்கு 41 DBC பணியாளர்கள் நியமித்து பணிகள் மேற்கொள்ள அனுமதியும், அவர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர், புதுக்கோட்டை அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள தினக்கூலி அடிப்படையில் ஊதியம் வழங்க அக்டோபர் 2018 முதல் மார்ச் 2019 வரை ஊதியம் வழங்க ஆகும் உத்தேச செலவு ரூ.15.00 லட்சத்திற்கு (ரூபாய் பதினைந்து லட்சத்திற்கு மட்டும் ) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது .

**அலுவலகக்குறிப்பு :**

1 . மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண் .1246/2016/எச்1)

## பொருள் எண்–9

அறந்தாங்கி நகராட்சியில் உள்ள 27 வார்டுகளிலும் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் 7 பரப்புரையாளர்களும் 1 மேற்பார்வையாளரும் 1.11.2017 ம் தேதி முதல் பணிபுரிந்து வருகின்றனர் . இவர்கள் ஒப்பந்த அடிப்படையில் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தஞ்சாவூர் அவர்களால் ஒப்பந்தம் கோரப்பட்டு பணி உத்தரவு வழங்கி ,பணி உத்தரவு பெற்று பணிபுரிந்து வருகின்றனர் . இவர்களது பணிகாலத்தை மேலும் மூன்று மாதங்களுக்கு அக்டோபர் , நவம்பர் மற்றும் டிசம்பர் 2018 வரை நீட்டித்து நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை – 5 அவர்களின் கடிதம் ந.க.எண்.26458/2016/தி1 நாள் . 31.07.2018 ன் படி உத்தரவு வழங்கி உள்ளார் . மேலும் இம்மூன்று மாதங்களுக்கும் இவர்களுக்கு நகராட்சி பொது நிதியில் இருந்து ஊதியம் வழங்கவும் , அரசிடமிருந்து தொகை வந்தவுடன் நகராட்சி நிதியில் ஈடு செய்து கொள்ளப்படும் என்று நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் கடிதம் . ந.க.எண் . 857/2017/இ2 நாள் . 17.10.18 ல் அறிவுறுத்தப்பட்டுள்ளது . மேலும் , மேற்படி கடிதத்தில் நகராட்சி ஆணையர்கள் இணைப்பில் கண்டுள்ள ஊதியத்தில் 2% வருமான வரி பிடித்தம் செய்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் வங்கி கணக்கு எண் .136401000026480 ( இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, தஞ்சாவூர்) வரவு வைக்கவும் மீதமுள்ள தொகையினை AMK – ATHENCOTTASAN MUTHAMIL KHAZHAGAM, MAN POWER SERVICE வங்கி கணக்கு எண்.006333000000005 IFSC Code–IOBA0000063 என்ற முகவரிக்கு RTGS வழங்கவும், தெரிவிக்கப்பட்டுள்ளது .ஆகவே இந்நகராட்சியில் பணிபுரிந்து வரும் 7 பரப்புரையாளர்களுக்கும் 1 மேற்பார்வையாளருக்கும் இம்மூன்று மாதங்களுக்கு ஊதியம் வழங்க ஆகும் உத்தேச செலவு ரூ.330000/- (ரூபாய் மூன்று லட்சத்து முப்பதாயிரம் மட்டும்) க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .

**அலுவலகக்குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண் .4031/2017/எச்1)
2. மேற்படி தொகையினை அரசின் நிதி வரப்பெற்றதும் ஈடு செய்யவும் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்–10**

அறந்தாங்கி நகராட்சியிலுள்ள பொதுக்கழிவறைகள் 11 மற்றும் சமுதாயக்கழிவறைகள் 3, திடக்கழிவுகளிலிருந்து தயாரிக்கப்படும் மண்புழு உரம் மற்றும் திடக்கழிவு கலவை உரம் ஆகியவற்றை தொடர்ந்து ஒரு வருடங்களுக்கு கொள்முதல் செய்திட விருப்பம் உள்ள தனிநபர்/ விவசாயிகள்/ தொண்டு நிறுவனங்கள் ஆகியவை பணிகளை மேற்கொள்ள உண்டான ஒப்பந்த அறிவிப்பு மாவட்ட அளவில் நாளிதழில் விளம்பரம் செய்த வகையில் தொகை ரூ.5527/-ஐ TRINITY MIRROR (Bill No.MDUTAB0809000025 Date.08.06.18)ஆங்கில நாளிதழுக்கு வழங்க மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1.மன்றம் அனுமதிக்கலாம் ( ந.க.எண் 5637/2018/எச்1)

**பொருள் எண்–11**

இந்நகராட்சியில் இயங்கி வரும் வாகனங்கள் JCB TN 55 AT -9117 டிப்பர் லாரி TN 55 BZ -0160, மினிலாரி TN 55 B-1852 , டம்பர் பிளேசர் லாரி TN 55 B– 3520 ஆகிய வாகனங்களுக்கு 4 ஓட்டுநர்களும், உரக்கிடங்கிற்கு 3 காவலர்களும் தேவைப்படுவதால் பார்வை 1 ல் குறிப்பிட்டுள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை – 5 அவர்களின் உத்தரவுப்படி பார்வை 2ல் குறிப்பிட்டுள்ள மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நிர்ணயித்த ஊதிய விகிதப்படிகீழ்கண்டவாறு மதிப்பீடு தயார் செய்யப்படுகிறது .

| | |
|---|---|
| 1. TN 55 AT – 9117 JCB - டிரைவர் 556*365*1 | = ரூ . 202940/- |
| 2. டிரைவர் 3 நபர்களுக்கு 464*365*3 | = ரூ . 508080/- |
| 3. காவலர்கள் 3 நபர்களுக்கு 241*365*3 | = ரூ . 263895/- |
| 4. காப்பீட்டு தொகை நபருக்கு 1500 வீதம் 7* 1500 | = ரூ. 10500/- |
| 5. நிர்வாக செலவு 10% | = ரூ. 97492/- |
| மொத்தம் | = ரூ. 1082907/- |

ஆகவே மேற்கண்ட தொகைக்கு மன்ற பொருள் உத்தேச செலவினம் ரூ. 1100000/- (ரூபாய் பதினோரு லட்சம் மட்டும்) மன்ற பொருள் வைக்க ஆணையர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது .

**அலுவலகக்குறிப்பு :**

1. பொது சுகாதாரப் பிரிவின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்
(ந.க.எண் .1222/2017/எச்1)

**பொருள் எண்–12**

அறந்தாங்கி நகராட்சியிலுள்ள பொதுக்கழிவறைகள் 11 மற்றும் சமுதாயக்கழிவறைகள் 3, திடக்கழிவுகளிலிருந்து தயாரிக்கப்படும் மண்புழு உரம் மற்றும் திடக்கழிவு கலவை உரம் ஆகியவற்றை தொடர்ந்து ஒரு வருடங்களுக்கு கொள்முதல் செய்திட விருப்பம் உள்ள தனிநபர்/ விவசாயிகள்/ தொண்டு நிறுவனங்கள் ஆகியவை பணிகளை மேற்கொள்ள உண்டான ஒப்பந்த அறிவிப்பு மாவட்ட அளவில் நாளிதழில் விளம்பரம் செய்த வகையில் தொகை ரூ. 8013/-ஐ தினத்தந்தி தமிழ் நாளிதழுக்கு வழங்க மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1.மன்றம் அனுமதிக்கலாம் ( ந.க.எண் 6312/2018/எச்1)

## பொருள் எண்–13

அறந்தாங்கி நகராட்சியில் இயங்கி வரும் வாகனங்கள் JCB TN 55 AT -9117 டிப்பர் லாரி TN 55 BZ-0160, மினிலாரி TN 55 B-1852, டம்பர் பிளேசர் லாரி TN 55 B–3520 ஆகிய வாகனங்களை இயக்கவும் உரக்கிடங்கிற்கு இரவுக்காவலர்கள் 3 நபர்களும், HMS நிறுவனம் மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. HMS நிறுவனத்தின் ஒப்பந்த காலம் 05.09.2018 ம் தேதியுடன் முடிவடைந்து விட்டது. புதிய ஒப்பந்ததாரர் மூலம் பணிகள் மேற்கொள்ள டெண்டர் விடுவதற்கு பணிகள் நடைபெற்று வருகிறது. ஆகவே இப்பணிகள் முடிவடைந்து புதிய ஒப்பந்ததாரர் பணிகள் மேற்கொள்ளும் வரை இப்பணிகள் மேற்கொண்டு வரும் HMS நிறுவனம் இதே ஊதிய விகிதத்தில் செப்டம்பர் 2018 அக்டோபர் 2018 மற்றும் நவம்பர் 2018 வரை மேற்கொள்ளவும் அதற்கு ஆகும் ஊதியம் செலவு ரூ.225000/- (ரூபாய் இரண்டு லட்சத்து இருபத்தி ஐந்தாயிரம் மட்டும்) க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .

**அலுவலகக்குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண் . 1222 / 2017/ எச் 1)

## பொருள் எண்–14

இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் ஒப்பந்த அடிப்படையில் 76 துப்புரவு பணியாளர்களை கொண்டு துப்புரவு பணிகள் மேற்கொண்டு வரும் HMS நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ள ஒப்பந்த அனுமதி 30.11.2018ஆம் நாளுடன் முடிவடைவதால் மேற்காணும் பணிகளை தொடர்ந்து மேற்கொள்ள புதிய ஒப்பந்தபுள்ளி கோர வேண்டியுள்ளதால் இப்பணிகளுக்காக செலவின மதிப்பீடு (1 ஆண்டிற்கு) கீழ்காணும் விபரப்படி தயார் செய்யப்பட்டுள்ளது .

| | |
|---|---|
| 1. அனுமதிக்கப்பட்ட பணியாளர்கள் | – 76 |
| 2. ஊதியம் 76 நபர்கள; X ரூ.241 வீதம் X 365 நாட்கள் | – ரூ. 6685340/- |
| 3. தொழிலாளர் சேமநல நிதி | – ரூ. 1712115 /- |
| 4. காப்பீட்டு தொகை நபருக்கு 1500 வீதம் | – ரூ. 114000/- |
| 5. சீருடை நபருக்கு 2000 வீதம் | – ரூ. 152000/- |
| 6. பாதுகாப்பு உபகரணங்கள் நபருக்கு 2000 வீதம் | – ரூ. 152000/- |
| 7. நிர்வாக செலவு 10% | – ரூ. 668534/- |
| மொத்தம் | = ரூ. 9483989 /- |

மேற்காணும் விபரப்படி தயார் செய்யப்பட்டுள்ள செலவின கணக்கீட்டின் படி உத்தேச செலவினம் ரூ. 9500000/- (ரூபாய் தொண்ணூற்று ஐந்து லட்சம்) த்திற்கும், புதிய ஒப்பந்த புள்ளி கோரவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது .

**அலுவலகக்குறிப்பு:**

பொது சுகாதாரப் பிரிவின் அவசர அவசியம் கருதி ஒப்பந்த புள்ளி கோரும் பணிகளை மேற்கொள்ளவும், பணிகளுக்கான தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.9500000/- பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம் . (ந.க.எண் ./எச்1)

## பொருள் எண்–15

இந்நகராட்சி கலவை உரக்கிடங்கு வளாகத்தின் உட்புறம் அமைந்துள்ள மண்புழு உர மேடை கட்டிடத்திற்கு கூடுதல் வசதிகள் செய்து தரவும் புதிதாக வாங்கப்பட்ட பேலிங் இயந்திரத்திற்கு மேற்கூரை அமைக்கவும் அதற்காக தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.57,000/–க்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்
   (ந.க.எண்.4715/2018/இ1)

## பொருள் எண்–16

தொழில்வரி அறந்தாங்கி நகராட்சியில் 2018–19ம் இரண்டாம் அரையாண்டு முதல் தொழில்வரி உயர்வு செய்யப்பட்ட அறிக்கையினை மாவட்ட அரசிதழ் பிரசுரம் செய்ய அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ளபடி பிரசுரக் கட்டணம் ரூ.4200/- கீழ்காணும் தலைப்பில் செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

"0058 00 Stationery and Printing
200 Other Press Receipts –AA Cost
Of Printing work done for
Other Govt. Departments.
0058 00 200 AA 0002"

**அலுவலகக்குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.

## பொருள் எண்–17

இந்நகராட்சியில் அவசர அவசியம் கருதி கீழ்கண்ட பணிகளை நகராட்சிகளின் சட்டம் பிரிவு–15ன் கீழ் செய்யப்பட்டதையும் அதற்கான செலவினங்களுக்கும் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | முகவரி | விபரம் | செலவினம் (ரூபாய்) |
|---|---|---|---|
| 1. | சி.சேகர், துப்புரவு ஆய்வர் | இந்நகராட்சி பொது சுகாதார பிரிவு மூலம் செயல் படுத்தப்படும் திடக்கழிவு மேலாண்மை திட்டம் மற்றும் அரசு பொருட்காட்சிக்கு திடக்கழிவு மேலாண்மை திட்டம், டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை கலவை உரம் தயாரிப்பு பிளாஸ்டிக் கலர் பிரிண்ட் செலவு செய்த வகையில் | 11280.00 |
| 2 | வீ.மதியழகன், பதிவறை எழுத்தர் | இந்நகராட்சி சொத்து வரி சீராய்வு மாஸ்டர் லிஸ்ட், வார்டு வாரியான புக் லெட் பைண்டிங் செய்த வகையில் | 2160.00 |
| 3. | எஸ்.சபாபதி, ராஜ் பிளக்ஸ் வீரமாகாளியம்மன் கோவில் தெரு, அறந்தாங்கி | அனுமதியற்ற மனைப்பிரிவுகள் முறைப்படுத்துதல் குறித்த விழிப்புணர்வு விளம்பர தட்டிகள் தயார் செய்து பொதுமக்கள் அறியும் வகையில் நிருவியது மற்றும் துண்டு பிரசுரங்கள் அச்சடித்து வழங்கிய வகையில் | 54,600.00 |
| 4 | சி.சேகர், துப்புரவு ஆய்வர் | இந்நகராட்சி பொது சுகாதார பிரிவு மூலம் திடக்கழிவு மேலாண்மை திட்டத்திற்காக வீடு வீடாக சென்று மட்கும் குப்பை, மட்கா குப்பைகளையும் BWG Onside Compost Photo பிரிண்ட் எடுத்த வகையில் | 7900.00 |
| 5 | கே.முகமது அலி ஜின்னா, லக்கி ரீவைண்டிங் | அரசு மருத்துவமனை நீருந்து நிலையத்தில் ஆழ்குழாய் மோட்டர் 20 எச்.பி. பழுது நீக்கம் செய்து ரீவைண்டிங் செய்த வகையில் உண்டான செலவினம் | 19000.00‘ |
| 6 | கே.முகமது அலி ஜின்னா, லக்கி ரீவைண்டிங் | வெள்ளாறு நீருந்து நிலையத்தில் ஆழ்குழாய் மோட்டர் 20 எச்.பி. பழுது நீக்கம் செய்து ரீவைண்டிங் செய்த வகையில் உண்டான செலவினம் | 8700.00‘ |
| 7 | சி.சேகர், துப்புரவு ஆய்வர் | இந்நகராட்சி பொது சுகாதார பிரிவு மூலம் திடக்கழிவு மேலாண்மை திட்டம் தனி நபர் கழிப்பிடம் கட்டும் திட்டம் மற்றும் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை போட்டோ மற்றும் புக்லெட் தயார் வகையில் | 7545.00 |
| 8 | மா.சுப்பிரமணியன், உதவியாளர் | இந்நகராட்சி அலுவலக பயன்பாட்டில் உள்ள பழுதடைந்த எஸ் டைப் நாற்காலிகள், மர நாற்காலிகள் ஒயர் கொண்டு பின்னி பழுது நீக்கம் செய்து பயன்பாட்டிற்கு கொண்டு வந்த வகையில் | 4900.00 |
| 9 | மு.இராதா, மின் கம்பியாளர் | இந்நகராட்சி அலுவலக பயன்பாட்டில் உள்ள பழுதடைந்த சுழல் சொகுசு நாற்காலிகள் சக்கரம் மற்றும் ஏர் வேக்வம் பழுது நீக்கம் செய்து பயன்பாட்டிற்கு கொண்டு வந்த வகையில் | 3950.00 |
| 10 | The Athens Charitable and Educational Trust, Thiruvannamalai | இந்நகராட்சி பகுதியில் எஸ்.யு.எஸ்.வி. சாலைஓர வியாபாரிகளுக்கு பயோமெட்ரிக் அடையாள அட்டை வழங்க உரிய விபரங்கள் பெற்று தயார் செய்து வழங்கிய வகையில் (80 சதவீத தொகை) | 38088.00 |
| 11 | க.ஆத்மநாதன், துப்புரவு பணி மேற்பார்வையாளர் | இந்நகராட்சி ஆணையர் மற்றும் சுகாதார அலுவலர் அவர்களின் ஆணையின்படி புதுக்கோட்டைக்கு துப்புரவு பணியாளர்களை அழைத்து சென்று வர அரசு போக்குவரத்து கழக பேருந்துக்கான தொகை வழங்கிய வகையில் | 5416.00 |

அலுவலகக்குறிப்பு:–

பதிவு செய்யலாம்

பொருள் எண்–18

அறந்தாங்கி நகராட்சியில் தூய்மை இந்தியா இயக்கம், திடக்கழிவு மேலாண்மை திட்டம், 7வது மாநில உயர்மட்ட குழு நிதி 2018–2019ன் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்புகள் விளம்பரம் செய்த வகையில் கீழ்கண்டுள்ள விபரப்படி நாளிதழ்களுக்கு உண்டான விளம்பர கட்டணத் தொகை கீழ்கண்டுள்ளவாறு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது

| வ.எண் | நாளிதழின் பெயர் | பில் எண் மற்றும் நாள் | விளம்பர செய்யப்பட்ட நாள் | தொகை |
|---|---|---|---|---|
| 01 | Accord Advertising Agencies, Chennai | DIPR/AAA/0536/18-2019/ dt.01.09.2018 | 29.08.2018 | 51,608.00 |
| 02 | Accord Advertising Agencies, Chennai | DIPR/AAA/0606/18-2019/ dt.17.09.2018 | 29.08.2018 | 83,160.00 |
| 03 | Accord Advertising Agencies, Chennai | DIPR/AAA/0745/18-2019/ dt.13.10.2018 | 13.10.2018 | 64,663.00 |
| 04 | Theekkathir Trichy Advt. | 217 Dt.04.10.2018 | 04.10.2018 | 9592.00 |
| | | | மொத்தம் | 2,09,023.00 |

அலுவலக குறிப்பு:–

மன்றம் அனுமதி வழங்கலாம் (ந.க.எண்.7043/2017/அ1)

பொருள் எண்–19

இந்நகராட்சிக்கு சொந்தமான பட்டுக்கோட்டை சாலை மயானத்தில் அமைக்கப்பட்டுள்ள நவீன எரிவாயு தகன மேடையினை இந்நகர்மன்ற தீர்மான எண்.20 நாள்.10.05.2017ன் படி பராமரிப்பு மேற்கொள்ள கே.பி.எஸ்.எஸ்.சி. சமூக அறக்கட்டளைக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டு பணி உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி சமூக அறக்கட்டளையால் தற்பொழுது வரை நல்லமுறையில் பராமரிப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி உத்திரவில் இறந்த ஒரு உடலை தகனம் செய்திட ரூ.2500 /– என நிர்ணயம் செய்து வழங்கப்பட்டுள்ளது. தற்பொழுது பணியாளர் ஊதியம் மின் கட்டணம் மற்றும் பராமரிப்பு செலவினை மேற்கொள்வதில் மேற்படி நிர்ணயிக்கப்பட்ட தொகை கட்டுபடியாகவில்லை என்றும் மேற்படி தொகையினை ரூ.4500/– என உயர்த்தி வழங்கிட பராமரிப்பு மேற்கொண்டு வரும் கே.பி.எஸ்.எஸ்.சி. சமூக அறக்கட்டளையினர் கடிதம் அளித்தனர். மேற்படி கடிதத்தின் மீது இந்நகராட்சியால் அமைக்கப்பட்ட குழுவின் முன்பு அறக்கட்டளை நிர்வாகிகளும் கலந்து கொண்டு ஆலோசனை மேற்கொண்டதில் பொதுமக்களை பாதிக்காத வகையில் மேற்படி தொகையினை ரூ.3500/– என உயர்த்துவது என முடிவெடுக்கப்பட்டது. மேலும் எரியூட்டப்படும் ஒரு பிரேதத்திற்கு நகராட்சிக்கு செலுத்தப்படும் தொகை ரூ.100 /– என உள்ளதனை ரூ.150/– உயர்த்திடவும் தீர்மானிக்கப்பட்டது. மேற்படி விபரம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.2205/2012/இ1)

**<u>பொருள் எண்–20</u>**

இந்நகராட்சி பகுதியில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் கையாளுதல் விதிகள் –2016ன் படி வீடுவீடாக குப்பை பிரித்து, சேகரித்து மக்கும் குப்பையிலிருந்து இயற்கை உரம் தயாரித்தல், சாக்கடை சுத்தம் செய்தல் உள்ள அனைத்து பொது சுகாதார பணிகளையும் முழுமையாக செயல்படுத்தும் வகையில் தேவையான 76 துப்புரவு பணியாளர்கள் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–5 அவர்களின் ந.க.எண். 15327/பி3/2013 நாள்.08.05.2013ம் தேதி அனுமதி வழஙகப்பட்டு கடந்த இரண்டு ஆண்டுகளாக நல்ல முறையில் 1,3,5,6,8,9,10,11,12,16,17,18,23 மற்றும் 27 ஆகிய 14 வார்டுகளில் இந்நகர்மன்ற தீர்மான எண்.141 நாள்.22.11.2017ன்படி ஜெயஙகொண்டத்தை சேர்ந்த சேர்ந்த தனியார் நிறுவனத்தின் மூலம் செய்யப்பட்டு வந்தது. மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்த காலம் 30.11.2018 உடன் முடிவுக்கு வருகிறது.

தற்பொழுது 2018 ம் ஆண்டின் மாவட்ட ஆட்சித்தலைவர், புதுக்கோட்டை அவர்களின் தினக்கூலி விகிதத்தின் அடிப்படையில் ஒப்பந்தத்தொகை கீழ்கண்டுள்ளவாறு நிர்ணயம் செய்யவும் அதற்கான தொகைக்கும், அதன்படி புதிதாக ஒப்பந்தம் கோர இந்நகர்மன்ற தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி நாள் 28.09.2018ன் படி அனுமதிக்கப்பட்டுள்ளது. அதன்படி 26.10.2018 அன்று மாநில அளவில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டுள்ள விபரப்படி மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. அவை

| | |
|---|---|
| 1. | ரெல்யான் பெசிலிட்டி சர்வீஸ் பிரைவேட் லிட்,<br>பிளாட் எண்.142, 5வது குறுக்கு தெரு,<br>ஸ்ரீ சாய் நகர், ஒக்கியம், துறைப்பாக்கம், சென்னை–97 |
| 2. | டிரஸ்டஸ் அவுட்சோர்சிங் சொலுயூசன்ஸ் பிரைவேட் லிட்,<br>எண்.117, 28வது தெரு, பாலாஜி நகர், சென்னை–91 |
| 3. | ஜெய் சீரடி சாய் மேன்பவர் ஏஜென்ஸி, மதுரை |

மேற்படி வரிசை எண்.1,2 ல் கண்டுள்ள நிறுவனங்கள் Offline வாயிலாகவும் வரிசை எண்.3ல் கண்டுள்ள நிறுவனம் Online வாயிலாகவும் ஒப்பந்தப்புள்ளி செய்திருந்தன. இதில் வரிசை எண்.3ல் கண்டுள்ள ஜெய் சீரடி சாய் மேன்பவர் ஏஜென்ஸி, மதுரை நிறுவனம் முன்வைப்புத் தொகை மற்றும் உரிய இணைப்புகள் இணைக்கவில்லை எனவே மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்பட்டது.

மேற்கண்டுள்ள வரிசை எண்.1,2ல் கண்டுள்ள இரண்டு நிறுவனங்களின் முதல் உறை (தொழில் நுட்பம்) (Technical Bid) ஒப்பந்தப்புள்ளி திறக்கப்பட்டு இந்நகராட்சியால் அமைக்கப்பட்ட மதிப்பீட்டுக்குழு சீராய்வு செய்ததில் இந்நகராட்சி ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளை உரியவாறு இரண்டு நிறுவனங்களும் தகுதி பெற்றுள்ளதால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மேற்படி நிறுவனங்களது இரண்டாவது உறை (நிதி விபரம்) (Financial Bid) வந்திருந்த நிறுவனங்களின் முன்பு திறக்கப்பட்டதில் கீழ்கண்டுள்ள விபரப்படி

| வ. எண் | பணி குறித்த விபரம் | ரெல்யான் பெசிலிட்டி சர்வீஸ் பிரைவேட் லிட், பிளாட் எண்.142, 5வது குறுக்கு தெரு, ஸ்ரீ சாய் நகர், ஒக்கியம், துறைப்பாக்கம், சென்னை–97 | டிரஸ்டஸ் அவுட்சோர்சிங் சொலுயூசன்ஸ் பிரைவேட் லிட், எண்.117, 28வது தெரு, பாலாஜி நகர், சென்னை–91 |
|---|---|---|---|
| 1 | 14 வார்டுகளில் 76 பணியாளர்களை கொண்டு பணி செய்ய ஆண்டு ஒன்றுக்கு | ரூ.99,30,920.00<br>மதிப்பீட்டை விட 4.71 சதவீதம் அதிகம் | ரூ.99,86,400.00<br>மதிப்பீட்டை விட 5.26 சதவீதம் அதிகம் |

மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் கூடுதலில் குறைவாக (4.71 சதவீதம் அதிகம் ) கொடுத்துள்ள ரெல்யான் பெசிலிட்டி சர்வீஸ் பிரைவேட் லிட், சென்னை நிறுவனத்திடம் மேற்படி விலைவிகிதத்தினை மதிப்பீட்டை விட விலை குறைத்துதர கோரியதில் அவர்கள் கீழ்கண்டுள்ளவாறு குறைத்துக்கொள்வதாக தெரிவித்தார்கள்.

ஒரு நபருக்கு நாள் ஒன்றுக்கு ஒட்டு மொத்தமாக நாள் ஊதியம் ரூ.358/– என உள்ளதனை ரூ.357/– என குறைத்துக் கொள்வதாக கடிதம் வழங்கினார்கள். இதனால் ரூ.27740/– ஐ குறைத்து ரூ.99,03,180.00 செய்துகொள்ள தெரிவித்துள்ளனர். இது மதிப்பீட்டை விட 4.42 சதவீதம் அதிகமாக உள்ளது.

மேற்படி ஒப்பந்தப்புள்ளியினை ஏற்பது குறித்து மன்றத்தின் முடிவிற்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு.

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ரெல்யான் பெசிலிட்டி சர்வீஸ் பிரைவேட் லிட், சென்னை–97 நிறுவனம் கொடுத்துள்ள மதிப்பீட்டை விட அதிகத்தில் குறைந்த (4.42சதவீதம்) ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
3. மேலும் மேற்படி ரெல்யான் பெசிலிட்டி சர்வீஸ் பிரைவேட் லிட்., சென்னை–97 நிறுவனம் தங்களது அனுபவமாக அறந்தாங்கி, கரூர், தேனி அல்லி நகரம், பொள்ளாச்சி, செம்பாக்கம், பல்லடம் நகராட்சி ஆகிய உள்ளாட்சி அமைப்புகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டம் பணிகள் மேற்கொண்டதாக ஆவணங்கள் இணைக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
4. மேலும் மேற்படி ஒப்பந்தத் தொகை மதிப்பீட்டை விட அதிகமான தொகையில் குறைந்த சதவீதமானது 2018ல் ஒரு மாதமும் 2019ம் ஆண்டில் 11 மாதங்கள் மேற்கொள்ளப்படஇருப்பதால் மாவட்ட ஆட்சித்தலைவர், புதுக்கோட்டை அவர்களின் மாதாந்திர தினக்கூலி தொகையின் அடிப்படையில் பிறப்பிக்கபடும் தொகைக்கு ஈடு செய்து கொள்ளும் பொழுது இந்த சதவீதம் அதிகமில்லாமல் இருக்கும் எனவே இத்தொகைக்கு ஒப்புக்கொள்ளலாம்.
5. மேலும் கூடுதல் சதவீதமானது நகர்மன்ற எல்லைக்கு கட்டுபட்டு உள்ளதால் அதனை ஏற்கலாம்.

## மன்றப் பொருள்

அறந்தாங்கி நகராட்சியில் தூய்மை இந்தியா இயக்கம், திடக்கழிவு மேலாண்மை திட்டம், 7வது மாநில உயர்மட்ட குழு நிதி **2018–2019**ன் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்புகள் விளம்பரம் செய்த வகையில் கீழ்கண்டுள்ள விபரப்படி நாளிதழ்களுக்கு உண்டான விளம்பர கட்டணத் தொகை கீழ்கண்டுள்ளவாறு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது

| வ.எண் | நாளிதழின் பெயர் | பில் எண் மற்றும் நாள் | விளம்பர செய்யப்பட்ட நாள் | தொகை |
|---|---|---|---|---|
| 01 | Accord Advertising Agencies, Chennai | DIPR/AAA/0536/18-2019/ dt.01.**09.2018** | **29.08.2018** | **51,608.00** |
| 02 | Accord Advertising Agencies, Chennai | DIPR/AAA/0606/18-2019/ dt.17.**09.2018** | **29.08.2018** | **83,160.00** |
| 03 | Accord Advertising Agencies, Chennai | DIPR/AAA/0745/18-2019/ dt.13.**10.2018** | **13.10.2018** | **64,663.00** |
| 04 | Theekkathir Trichy Advt. | 217 Dt.04.10.2018 | **04.10.2018** | **9592.00** |
| | | | மொத்தம் | **2,09,023.00** |

**அலுவலக குறிப்பு:–**

மன்றம் அனுமதி வழங்கலாம் **(ந.க.எண்.7043/2017/அ1)**

தனி அலுவலர்/ ஆணையர்(பொ),
அறந்தாங்கி நகராட்சி